**இலங்கையின் ஒரு புதிய அரசிலமைப்பு தொடர்பான தமிழ்த் தேசிய கூட்டமைபபின் நிலைப்பாடு**

இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK) தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (PLOTE) ஆகிய கட்சிகளடங்கிய ஒரு கூட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பதனது, ஓர் ஒன்றுபட்ட நாடாக இலங்கை நிலைபேறான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கி நகர வேண்டுமாயின் புதிய அரசியலமைப்பொன்று அவசியமென நம்புகிறது. இலங்கையின் தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்ற வகையில் சகல மக்களும் சமமானவர்களாக நடத்தப்படுவதும் நாட்டின் பல்லின, பன்மொழி மற்றும் பல்மத பன்மைத்துவத் தன்மை உறுதிப்படுத்தப்பவதும் பாதுகாக்கப்படுவதும் போற்றப்படுவதுவதுமான ஓர் ஐக்கிய, பிரிபடாத, பிரிக்க முடியாத நாட்டிற்கான எமது பற்றுறுதியை நாம் நாட்டுக்கு உறுதிகூறுகின்றோம். ஓர் அரசியலமைப்பானது, நாட்டில் வாழும் பல்வேறு மக்களுக்கிடையிலான ஒரு சமூக ஒப்பந்தமாகும் என்றும் அது அவ்வாறு இருக்க வேண்டுமென்றும் நாம் நம்புகின்றோம் வலியுறுத்துகின்றோம். எனவே, அரசியலமைப்பின் அடிப்படை அம்சமும் அதன் அடிப்படைக் கட்டமைப்பும் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இருப்பினும் அல்லது சிறுபான்மையினராக இருப்பினும் இலங்கை மக்களுக்கிடையேயான அடிப்படை இணக்கப்பாட்டைப் பிரதிபலிக்க வேண்டும். அதனை அடைவதற்கு ஒருசில வரலாற்று உண்மைகளைப் புரிந்துகொள்வதும் போற்றுவதும் அவசியமாகும். அப்போது, கடந்த எழுபதாண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களின் கௌரவத்திற்கும் தன்னாதிக்கத்திற்குமான போராட்டம் எப்போதும் இலங்கையின் சமூக உடன்படிக்கைக்கான ஒரு பதிற்செயற்பாடாவும் அதன் பிரதிபலிப்பாகவும் இருந்துள்ளது என்பது தெளிவாகும். அதற்கமைய, தமிழ் மக்களின் போராட்டமானது, அவ்வக் காலகட்டங்களில் நிலவிய தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கைகளை பிரதிபலிக்கும் நான்கு வெவ்வேறான கட்டங்களுக்கு உட்பட்டிருந்தது: (1) சம அந்தஸ்து, (2) சமஷ்டி, (3) பிரிவினைவாதம், மற்றும் (4) இலங்கை அரசினால் வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளுக்கமைய அதிகார பரவலாக்கம் வாயிலான ஆட்சி அதிகாரத்தைப் பகிர்தல்.

**சம அந்தஸ்து**

இலங்கையின் சுதந்திரத்திற்கான முயற்சிகளின்போதும் சுதந்திரத்தின் பின்னர் முதலாவது தசாப்தத்திலும் தமிழ் மக்கள் இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பில் சம அந்தஸ்தைக் கோரிநின்றனர். வெவ்வேறுபட்ட மக்களின் தனிச் சிறப்பான தனித்துவங்களின் காரணமாகவும் 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சக்திகள் வருவதற்கு முன்னர், தனித்துவமானதும் சுதந்திரமானதுமான மூன்று ஆள்புலங்கள் இங்கு நிலவின என்ற வெளிப்படையான உண்மையின் காரணமாகவுமே அத்தகைய சமத்துவம் கோரப்பட்டது. தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடம் அத்தகைய ஆள்புலங்களுள் ஒன்றாகும். எமது கருத்தின்படி, இலங்கையில் எந்த இனக் குழுமம் முதலில் வாழ்ந்தது என்பது பற்றியதோர் வரலாற்று ஆய்வு உதவுகரமானதும் அல்ல, பொருத்தமானதும் அல்ல. கண்டிய இராச்சியம் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தீவு கோல்புருக்-கமரூன் ஆணைக்குழுவின் பரிந்துரையின் விளைவாக 1833இல் ஒரே ஆள்புலமாக மாறியது. இந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு பார்க்கையில், ஒவ்வொரு ஆள்புலத்திலும் வாழ்ந்தவர்கள் இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பிற்குள் சமமானவர்களாக அங்கீகரிக்கப்படுவதற்கு எதிர்பார்ப்பது இயல்பானதேயாகும்.

இக் காலப்பகுதியில், சிங்களத் தலைவர்கள் அடங்கலாக ஏனையவர்களும் சமஷ்டி கட்டமைப்பிலான ஆட்சியமைப்பு ஒன்றைக் கோரினர். 1926ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க இலங்கை சமஷ்டி ஆட்சிக் கட்டமைப்பொன்றைக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஆலோசனையை முன்வைத்தார். 1934ஆம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிசக் கட்சியும் சமஷ்டி ஏற்பாட்டிற்கு ஆதரவாக தீர்மானம் இயற்றியது. கண்டியத் தலைவர்கள் தாம் டொனமூர் ஆணைக்குழு முன்நிலையிலும் சோல்பரி ஆணைக்குழு முன்நிலையிலும் கருத்துச் சமர்ப்பணங்களை மேற்கொண்டபோது, தொடர்ந்து ஒரு சமஷ்டி ஆட்சி முறைக்காக வாதாடினர். அக் காலத்தில் தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி ஏற்பாடொன்றைக் கோரவில்லை. மாறாக, தமிழர்கள் சம அந்தஸ்திற்காகப் போராடினர்.

**சமஷ்டி**

1948இல், சுதந்திரம் பெற்றபோது, ஒரு சமஷ்டி ஏற்பாடோ அல்லது சம அந்தஸ்தோ பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் அவசியமானதெனக் கருதப்படவில்லை. சாதாரண பெரும்பான்மை ஆட்சியுடனான ஓர் ஒற்றை ஆட்சி அரசியலமைப்பான சோல்பரி அரசியலமைப்பு எந்தவொரு சிறுபான்மை இனத்தையும் பாதகமாகப் பாதிக்கும் அல்லது எந்தவொரு சமூகத்திற்கும் ஏதேனும் விசேட பயனை வழங்கும் சட்டம் நிறைவேற்றப்படுவதன்மீது தெளிவானதொரு தடையுடன் பிரகடணப்படுத்தப்பட்டது. எனினும், இவ் அரசியலமைப்புத் தடை பெரும் எண்ணிக்கையிலான இந்திய வம்சாவளித் தமிழருக்கு பிரசாவுரிமையை மறுத்த 1948ஆம் ஆண்டின் பிரசாவுரிமைச் சட்டம் போன்ற பாகுபாடான சட்டங்களை உண்மையில் தடுக்கவில்லை. அதிகரித்துச் சென்ற இவ் அநீதிகளின் காரணமாக, 1951ஆம் ஆண்டில் பிரதான தமிழ் அரசியல் கட்சியாகவிருந்த "சமஷ்டி கட்சி" என்றும் அறியப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியான (ITAK) நாங்கள், சமஷ்டி ஆட்சிக் கட்டமைப்பொன்றிற்கான எமது கோரிக்கையை வலியுறுத்தினோம். அதன் பின்னர், மிகவும் மோசமான வகையில் பாகுபாடு மிக்க இன்னொரு சட்டம் - அரச கரும மொழிச் சட்டம் - 1956இல் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம், தமிழ்தான் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்ட மொழியாகும் என்ற வரலாற்று ரீதியான உண்மை இருந்தபோதிலும், சிங்களத்தை நாடு முழுவதற்குமான அரச கரும மொழியாக ஆக்கியது.

1957ஆம் ஆண்டு ஜூலை மாதம், பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். .டீ. பண்டாரநாயக்க அவர்களுக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ். ஜே. வீ. செல்வநாயகத்திற்குமிடையே ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தம், ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்படவேண்டிய பிராந்திய சபைகளின் உருவாக்கத்தை உள்ளடக்கி இருந்தது. அதில் ஒரு பிராந்திய சபை, வடக்கிற்கு உருவாக்கப்பட வேண்டியிருந்தது் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய சபைகள் கிழக்கிற்கு உருவாக்கப்பட இருந்தது. பிராந்திய சபைகளுக்கு மாகாண எல்லைகளுக்கு அப்பால் இணைவதற்கான அதிகாரம் இருந்தது என்பதோடு, காணி பெறுபவர்களைத் தெரிவு செய்தல் மற்றும், காணி அபிவிருத்தித் திட்டங்களில் தொழில் புரியும் நபர்களைத் தெரிவு செய்தல் ஆகியன அடங்கலான குடியேற்றம் பிராந்திய சபைகளுக்கு

வழங்கப்படவிருந்தது. எனினும், இவ் ஒப்பந்தம் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து அதற்கு எதிர்ப்பு வந்தது என்ற காரணத்தினால் மீறப்பட்டது. பின்னர், 1965ஆம் ஆண்டில், தன்னாதிக்கத்திற்கான இதே போன்ற இன்னொரு ஒப்பந்தம் பிரதம மந்திரி டட்லி சேனாநாயக்கவிற்கும் தமிழ்த் தலைவர் எஸ். ஜே. வீ. செல்வநாயகத்திற்குமிடையே செய்துகொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டத்தின்கீழ் வரும் காணிகள் பின்வரும் முன்னுரிமைகளின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும்: முதலாவதாக, அம் மாவட்டத்திலுள்ள காணியற்ற மக்களுக்கு இரண்டாவதாக, வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் காணியற்ற நபர்களுக்கு மூன்றாவதாக, தீவின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்ப் பிரசைகளுக்கு முன்னுரிமை வழங்கி, இலங்கையில் உள்ள வேறு காணியற்றப் பிரசைகளுக்கு. எனினும், அவ் ஒப்பந்தமும் அதே காரணத்தினால் மீறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில், அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள், நாட்டில் தமிழ் மக்களின் அந்தஸ்தை பலவீனப்படுத்தவும் இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பினுள் பேரினவாத ஆட்சியை பாதுகாக்கவும் தீர்மானித்தன. 1972ஆம் ஆண்டில், இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பு சிங்களத்தை ஒரே அரச கரும மொழியாக உறுதிப்படுத்தியதோடு பௌத்த மதத்திற்கு ‘‘மிக உயரிய இடத்தை’’ வழங்கியது. இவ் அம்சங்கள் பின்னர், 1978ஆம் ஆண்டில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பிலும் பிரதிபலிக்கப்பட்டன. இவ்விரு ஆவணங்களும் முன்னைய சோல்பரி அரசியலமைப்பில் அடங்கியிருந்த பாரபட்சமான சட்டங்கள் மீதான தடையை வேண்டுமென்றே விட்டுவிட்டன.

**பிரிவினைவாதம்**

பேரினவாதத்தை நோக்கி வளைந்து செல்லும் போக்கு, தமது கௌவரவத்திற்கு மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப்படும் இழிவுபடுத்தல் மற்றும் தமது இறையாண்மையை பிரயோகிப்பதற்கான எந்தவொரு காத்திரபூர்வமான வாய்ப்பும் திட்டமிட்ட வகையில் மறுக்கப்படுதல் ஆகியவற்றினால், தமிழ் மக்கள் சமஸ்டி ஏற்பாட்டிற்கான தமது கோரிக்கையை கைவிட்டு தனியரசு ஒன்றிற்கான கோரிக்கையை நோக்கி நகர்ந்தனர். இம்மாற்றத்திற்கு முன்னர், 1970 ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரிவினைவாதம் நாட்டினதும் தமிழ்

மக்களதும் நலனுக்கு உகந்ததல்ல என்பதனால், அதனைக் கோருகின்ற எந்தவொரு கட்சிக்கும் வாக்களிக்க வேண்டாமென தமிழ் மக்களிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி குறிப்பாகக் கோரியது. எனினும், 1971 ஆண்டு அரசிலமைப்புச் சபையில் தமிழரசுக் கட்சியின் ஒவ்வொரு நியாயமான கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டதனால், தமிழரசுக் கட்சி அந் நடைமுறையினின்றும் விலகிக் கொண்டது.

1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் தனது பாராளுமன்ற ஆசனத்தை இராஜிநாமாச் செய்து, 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதை நிரூபிப்பதற்காக காங்கேசன்துறைத் தொகுதிக்கு ஓர் இடைக்காலத் தேர்தலை நடத்த வற்புறுத்தினார். அத்தேர்தலில் அவர் மிகப் பெரும்பான்மையோடு வெற்றிபெற்று, தமிழ் மக்கள் 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பை நிராகரித்து விட்டனர் என்பதையும் அவ்வரசியலமைப்பினால் தாம் கட்டுண்டு இருக்கவில்லை என்று கருதுகின்றனர் என்பதையும் நிரூபித்தார். இத்தொடர் நிகழ்வுகள்தான் காலப்போக்கில் ஐரோப்பியர் ஆக்கிரமிப்பிற்கு முன்னர் நிலவிய தனி அரசொன்றை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் மீள் உருவாக்குவதற்கும் தீர்மானித்த தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) யின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு இட்டுச் சென்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 ஜூலை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் பெரும்பான்மைத் தெகுதிகளுள் ஒரு தெகுதியைத் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிபெற்று, தனி அரசொன்றைத் தாபிப்பதற்கு தமிழ் மக்களின் ஆணையை வென்றெடுத்தது. 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மூலம் இலங்கையின் பல்வேறு மக்களுக்கிடையிலான சமூக ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்கப்பட்டமையானது, பிரிவினைக்கான கோரிக்கைக்கு இட்டுச் சென்றது. அது, தமிழ் மக்கள் தமது இறையாண்மையைப் பிரயோகிப்பதற்கு அல்லது ஆட்சியதிகாரத்தில் தமது காத்திரபூர்வமான பங்குபற்றல் மறுக்கப்பட்டமையை நிவர்த்தி செய்வதற்கு மாற்று வழி எதுவும் இல்லாததன் காரணமாக விடுக்கப்பட்ட ஒரு கோரிக்கையாகும்.

**அதிகாரப் பகிர்வு**

1983 ஆம் ஆண்டின் தமிழருக்கு எதிரான இனப்படுகொலையையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரிவினைக்கு எதிரான ஆறாவது திருத்தத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ள மறுத்து, அதன் விளைவாக பாராளுமன்றத்தில் தமது ஆசனங்களை இழந்தனர். இக்காலப் பகுதியில், தமிழர் தேசியத் பிரச்சினையைத் தீர்க்குமுகமாக இந்தியாவின் நல்லெண்ணம் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1986ஆம் ஆண்டு மே 4ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 19ஆம் திகதி வரை இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் இடையே நடைபெற்ற விரிவான கலந்துரையாடல்களின் பின்னர், இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்திக்கும் இலங்கை சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவிற்கும் இடையே “இந்திய இலங்கை உடன்படிக்கை” 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இச் சர்வதேச இருதரப்பு ஒப்பந்தம் இலங்கை “ஒரு பல்லின, பன்மொழிச் சமூகம்” என்பதையும் ஒவ்வொரு குழுவிற்கும் மிகவும் கவனமாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு தனித்துவமான கலாசார மற்றும் மொழி தனித்துவம் உண்டு என்பதையும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகும் என்பதையும் அங்கீகரித்தது. மேலும், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பொன்று நடத்தப்படும் வரை அவ்விரு மாகாணங்களும் ஒரு நிர்வாக அலகாக இருக்கும் வண்ணம் இணைந்திருக்கும் என்பதையும் அது அங்கீகரித்தது.

தமிழ் பேசும் மக்களது மொழி மற்றும் ஆள்புல தனித்துவம் தொடர்பான கரிசனைகள் மிக உயர்வான சிங்களத் தலைவர்களான எஸ். டபிள்யூ. ஆர். .டீ. பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க மற்றும் ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோரினால் மூன்று தனித்தனி ஒப்பந்தங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அத் திருத்தம் இந்திய இலங்கை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட கோட்பாட்டை அடையவோ அல்லது தமிழ் மக்களின்

வேணவாக்களை முழுமையாக பூர்த்தி செய்யவோ இல்லையெனக் குறிப்பிட்டு ஸ்ரீ ராஜீவ் காந்திக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களான ஏ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோர் கடிதம் எழுதினர். இத் தொடர்பாடலின் விளைவாக, ஜே.ஆர். ஜயவர்தனவுடன் 1987 நொவம்பர் மாதம் 7ஆம் திகதி புதுடில்லியில் நடத்திய மேலதிகப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், குறைந்த பட்சம் மேற்கூறப்பட்ட கரிசனைகளைப் பூர்த்தி செய்வதற்கேனும் 13ஆவது திருத்தம் மேலும் மேம்படுத்தப்படும் என்ற ஒரு வாக்குறுதியை இந்திய அரசாங்கம் சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவிடமிருந்து பெற்றுக் கொண்டது.

1988இல் மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் பின்னர், அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாடுகள் போதுமானவை அல்ல என்ற காரணத்தின்பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணி அம் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், குறிப்பாக 13ஆவது திருத்தத்தின் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மாற்றங்கள் காரணமாகவும் 13ஆவது திருத்தத்தை மேலும் மேம்படுத்துவதற்கென வழங்கப்பட்ட வாக்குறுதியின் காரணமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனி அரசொன்றிற்கான அதன் கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தவில்லை. புதிய திருத்தம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றாதபோதிலும், இலங்கையின் தமிழ் பேசும் மக்களோடு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் தரப்பிலான ஒரு விருப்பத்தை எடுத்துக் காட்டுவதில் அது வெற்றி பெற்றது. அதற்கமைய, 1989இல் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்திற்கு மீண்டும் பிரவேசிப்பதற்குத் தீர்மானித்ததோடு, பிரிவினை வாதத்திற்கெதிரான சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந் நிலைப்பாட்டை திரு. அமிர்தலிங்கம் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்.

எனவே, தனி அரசொன்றிற்கான கோரிக்கையைத் தொடர்வதில்லை என்ற தீர்மானம், மாகாண சபைகள் முறைமை மூலமாக கட்டமைப்பு மாற்றமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது என்ற அடிப்படையிலும் காத்திரபூர்வமான அதிகாரப் பகிர்வு இன்னும் இடம்பெறவில்லை எனினும், பதின்மூன்றாவது திருத்தத்தை மேலும் மேம்படுத்துவதற்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலும் அமைந்திருந்தது. இப் பின்னணிகள்தான், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் பதின்மூன்றாவது திருத்தத்தை ஒரு சம்'டிக் கட்டமைப்பை

நோக்கி மேலும் மேம்படுத்தும் திசையில் அமைந்திருந்தது. பல தீர்வாலோசனைகளையும் வாக்குறுதிகளையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

முதலாவதாக, 1993இல் சனாதிபதி ஆர். பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தின்போது, மங்கள முனசிங்க தெரிவுக் குழு இந்திய மாதிரியின் அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கத்தைப் பரிந்துரை செய்தது. ஒருங்கியை நிரல் ஒன்றில் இல்லாதொழிக்கப்பட வேண்டும் அல்லது அதிலுள்ள பெரும்பாலான விடயங்கள் மாகாண நிரலுக்கு மாற்றப்பட வேண்டும் என்று அது ஆலோசனை தெரிவித்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஓர் உயர் சபையையும் அது மேலும் முன்மொழிந்தது.

இரண்டாவதாக, சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியின் கீழ் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான 1995 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளிலான அரசாங்கத்தின் தீர்வாலோசனைகள் மற்றும் 2000ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டமூலம் ஆகிய அனைத்தும் விரிவான அதிகாரப் பரவலாக்கத்தை முன்மொழிந்ததோடு, ஒற்றையாட்சி நிலைப்பாட்டையும் கைவிட்டன. அரசாங்கத்தின் மூன்று தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டு, புதிய அரசியலமைப்புச் சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு ஓர் அரசாங்க சட்டமூலமாக பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, தற்போதைய அரசாங்கத்தின் அங்கமாக விளங்கும் முன்னாள் சனாதிபதிகளான மகிந்த ராஜபக்‘ மற்றும் மைத்திரிபால சிரிசேன ஆகியோரும் தற்போதைய அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ் மற்றும் நிமால் சிரிபால டீ சில்வா ஆகிய அனைவரும் அவ் அமைச்சரவையில் அங்கம் வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பது உடனடியாகவன்றி, சனாதிபதி குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தின் பின்னரே நடைபெறும் என்ற ஒரே காரணத்திற்காகவே அச் சட்டமூலத்தை எதிர்த்தது. அந்த எதிர்ப்பைத் தவிர, ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான அச்சட்டமூலத்தின் முக்கிய உள்ளடக்கங்களை ஆதரித்தது. இவ்வாறு, ஓர் ஒற்றையாட்சி வரைச்சட்டகத்திலிருந்து சமஸ்டி ஆட்சி முறையொன்றிற்கு நகர்வது தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்தொருமைப்பாடு நிலவியது.

மூன்றாவதாக, 2002 டிசெம்பரில், இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒஸ்லோவில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இப்பேச்சு வார்த்தைகளின்போது, ஓர் ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் உள்ளக சுய நிர்ணய உரிமை எனும் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த ஒரு தீர்வை ஆராய்வதற்கு தரப்புகள் இணங்கின. இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவிற்கு பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தலைமை தாங்கினார். இவ்விணக்கப்பாட்டை எட்டிய பின்னர் அவர் ஒரு பத்திரிகை மாநாட்டில் பின்வருமாறு கூறினார்:

> ''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட ஓர் ஆலோசணக்கிணங்க, ஓர் ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டிக் கட்டமைப்பின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் உள்ளக சுய நிர்ணய உரிமை எனும் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த ஒரு தீர்வை ஆராய்வதற்கு தரப்புகள் இணங்கின. தீர்வு சகல சமூகங்களுக்கும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டுமென்பதை தரப்புகள் ஏற்றுக் கொண்டன.... அத்துடன் அந்த அடிப்படையில் விடயங்கள் பற்றி மேலும் கலந்துரையாடுவதற்கு தரப்புகள் இணங்கின.''

அவர் மேலும் கூறினார்:

> ''தமிழீழ விடுதலைப் புலிகள் இனிமேலும் ஒரு தனிநாடு கோரவில்லை எனினும்.....ஒரு வேறுபட்ட எண்ணக்கருவை ஆர்வத்தோடு ஆராய்கின்றனர்... அது அதிகாரப் பகிர்வு – ஒரே நாடு என்ற வரைச் சட்டகத்தினுள் விரிவான அதிகாரப் பகிர்வு, பிரிந்து செல்வதென்ற பேச்சே இல்லை, ஆனால் ஒரே நாடு என்ற வரைச் சட்டகத்தினுள் விரிவான அதிகாரப் பகிர்வு.''

நான்காவதாக, 2006 இல், ஒரு புதிய அரசியலமைப்பை வகுப்பதற்காக மகிந்த ராஜபக்' சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவொன்றையும் (யீசுஊ) வல்லுநர் குழுவொன்றையும் நியமித்தார். அவற்றின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அவற்றின் பணிகள் பற்றி சனாதிபதி பின்வருமாறு விளக்கினார்:

> ‘‘பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையிலிருந்தான கடந்த கால முயற்சிகளை நாம் ஆராய வேண்டும். மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் தமது தலைவிதியைத் தாமே பொறுப்பேற்று, தமது அரசியல் - பொருளாதார சூழலைத் தாமே கட்டுப்படுத்த வேண்டும். விகிதாசாரமற்ற வளங்களை ஒதுக்கீடு செய்யும் மத்திய தீர்மானம் மெற்கொள்ளல் நீண்ட காலமாக ஒரு பிரச்சினையாக நிலவி வருகிறது. மேலும், அதிகாரப் பரவலாக்கலானது, மத்தியில் அளவுக்கதிமாகத் தங்கியிராது தனித்துவம், பாதுகாப்பு மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றம் ஆகியன தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்பது வெளிப்படையான உண்மையாகும். இது தொடர்பாக, பிராந்திய சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்ப்பதும் முக்கியமாகும்…. ஓர் உண்மையான இலங்கை அரசியலமைப்பு வரைச்சட்டகத்தை விருத்தி செய்யும்போது, எமது உடனடுத்த அயல்நாடான இந்தியா அடங்கலாக உலகம் முழுவதும் நாம் ஆராயக்கூடிய உதாரணங்கள் பல உண்டு.
>
> இம்முரண்பாட்டிற்கான பின்னணியைக் கொண்டு பார்க்கும்போது, எந்தவொரு தீர்வும் நாட்டின் இறைமையை விட்டுக்கொடாது இயன்றவரை அதி கூடிய அதிகாரப் பரவலாக்கம் வரை விரிந்துசெல்லும் ஒன்றாகப் பார்க்கப்பட வேண்டும்.’’

இந்நடைமுறையின் இணைத் தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் நோர்வே ஆகியன பிரிவினைவாதத்தை மன்னிக்கவில்லை என்று சனாதிபதி ராஜபக்ச சரியாவே சுட்டிக் காட்டினார். எனினும், தீர்வு என்னவாக இருக்க வேண்டும் என்பது தொடர்பான தமது கருத்தையும் அவர்கள் தெரவித்தனர். அவர்கள் கூறினர்:

> முஸ்லிம்கள் அடங்கலாக அனைத்து இலங்கையினரதும் உரிமைகளை மேம்படுத்தும் புதிய ஆட்சி முறை ஒன்றைக் கொண்டு வருவதற்கான ஒரு தீவிர அரசியல் மாற்றத்திற்கு இலங்கை தயாராக உள்ளது என்பதை அது எடுத்துக் காட்ட வேண்டும். சர்வதேச சமூகம் அத்தகைய முயற்சிகளை ஆதரிக்கும் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளத் தவறுவது சர்வதேச ஆதரவைக் குறைத்துவிடும்….இலங்கையின் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இதுவரை போதுமான அளவில்

தீர்க்கப்படாத நியாயமானதும் கணிசமானதுமான பிரச்சினைகள் உள்ளன.

இதனிடையே, இணைத் தலைமை நாடகளுள் ஒன்றான ஐக்கிய அமெரிக்காவும் இலங்கை தொடர்பாக ஒரு சில விசேட கூற்றுக்களை மேற்கொண்டது. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் திரு. ரிச்சட் ஏ. பௌச்சர் 2006 ஜூன் 1ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்து பின்வருமாறு கூறினார்:

> ''ஓர் எதிர்கால இலங்கையின் தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு அவர்களுடைய நியாயபூர்வமான பிரச்சினைகள் தீர்க்கப்படுவதும் அவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுமான சிறந்த தொலை நோக்கொன்றை அரசாங்கம் வழங்க வேண்டுமென்று நாங்கள் கருதுகின்றோம். சனாதிபதி ராஜபக்ச ''அதி கூடிய அதிகாரப் பரவலாக்கல்'' பற்றிப் பேசியிருக்கிறார். முன்னைய பேச்சுவார்த்தைகள் ஒரு சம்'டி வரைச்சட்டகத்துள் ''உள்ளக சுயநிர்ணயம்'' தொடர்பாக இணங்கியுள்ளன. எனினும், கருத்து எவ்வாறு வெளியிடப்படினும், இலங்கை என்ற ஒரே நாட்டினுள் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்க்கை மற்றும் தலைவிதி மீது தாமே கட்டுப்பாடு கொண்டிருப்பர் என்ற நம்பிக்கையை வடக்குக் கிழக்கிலுள்ள பலருக்கு அது வழங்கும். .......தமிழ"ழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய வழிமுறைகளை நாம் நிராகரித்தபோதிலும், தமிழ் சமூகத்தினரால் எழுப்பப்படும் நியாயபூர்வமான பிரச்சினைகள் உண்டு என்பதோடு, தமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதற்கும் தமது சொந்த தலைவிதியை ஆளுவதற்கும் அத்துடன், தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் பகுதிகளில், தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆளுவதற்கும் கூடியதாக இருப்பதற்கு எல்லோரைப் போலவுமே அவர்களுக்கும் ஒரு மிகவும் நியாயமான விருப்பம் உண்டு.''

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு நடைமுறையில் சம்பந்தப்பட்டிருந்த பல்லின வல்லுநர் குழு தமது பிரதான அறிக்கையில் 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத அரசியலமைப்பு சட்டமூலத்திற்கு நிகரான விரிவானதொரு அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டினை முன்மொழிந்தது. இதனிடையே, சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின்

இறுதி அறிக்கை ஒருங்கியை நிரலை இல்லாதொழித்தல் அடங்கலான பதின்மூன்றாவது திருத்தத்திற்கான முக்கிய மேம்பாடுகளைப் பிரேரித்தது.

இறுதியாக, 2009ஆம் ஆண்டில், ஆயுத மோதல் முடிவுற்றதை அடுத்து, அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்தினை அமுல்படுத்துவதற்கும் அதன்மீது மேலும் கட்டியெழுப்புவதற்கும் சில வாக்குறுதிகளை வழங்கியது. அத்தகைய வாக்குறுதிகள், அதிகாரப் பரவலாக்கலுக்கான கடப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளோடு நடைபெற்றுவந்த பகைமையில் கட்டுண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தின. 2009 மே இல் முரண்பாடுகள் முடிவுற்ற காலத்திலும் அதற்குப் பின்னரும் அதே போன்ற அணுகுமுறை வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதைத் தெளிவாகக் காணலாம்.

2009 மே 26ஆம் திகதி, நாட்டிற்கு வருகைதந்திருந்த ஐநா செயலாளர்நாயகம் பெங்கி மூனுடன் பின்வருமாறு தெரிவித்து சனாதிபதி ராஜபக்ச கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார்:

> 13ஆவது திருத்தத்தின் அமுலாக்கத்தைத் தொடர்வதற்கும், புதிய சூழ்நிலையில் இந் நடைமுறையை மேலும் மேம்படுத்தி இலங்கையில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கொண்டுவருவதற்காக தமிழ்க் கட்சிகள் அடங்கலாக சகல தரப்பினருடனும் ஒரு விரிவான பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்குமான தனது உறுதியான தீர்மானத்தை சனாதிபதி ராஜபக்' வெளியிட்டார்.

அடுத்த நாளே, 2009 மே 27ஆம் திகதி, பின்வரும் வார்த்தைகளில் சனாதிபதி ராஜபக்சவின் மேற்கூறப்பட்ட கடப்பாடு உள்ளடக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை ஐநா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது:

> ‘‘ஓர் இராணுவத் தீர்வைத் தான் ஓர் இறதித் தீர்வாகக் கருதவில்லை என்று இலங்கையின் சனாதிபதியினால் அண்மையில் வழங்கப்பட்ட வாக்குறுதியையும் இலங்கையில் நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல் படுத்துவதற்கான அவரது பற்றுறுதியையும் வரவேற்கின்றோம்.’’

2010 ஜுன் மாதம், முன்னாள் இந்திய பிரதம மந்திரி கலாநிதி மன்மோகன் சிங் இலங்கை தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்தார் என்பது கவனிக்கத்தக்கதாகும். அதில் அவர் பின்வருமாறு கூறினார்:

"இலங்கையில் ஒரு சூழ்நிலை நிலவுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கப்பட்டது சிறந்ததொன்றாகும். எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு, தமிழர் பிரச்சினை நீங்கிவிடவில்லை. தமிழ் மக்களுக்கு நியாயமான கவலைகள் உள்ளன. அவர்கள், தாம் இரண்டாம் தரப் பிரசைகள் என்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருப்பதாக உணர்கின்றனர். எனவே, தமிழ் மக்கள் இலங்கையின் சமத்துவமான பிரசைகள் என்பதும் தாம் கௌரவமும் சுய மரியாதையும் கொண்ட வாழ்க்கையை நடத்த முடியும் என்பதுமான ஓர் உணர்வைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு புதிய நிறுவன மறுசீரமைப்பு முறைமையை நோக்கி நாம் நகர வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதே எமது அழுத்தமாகும்."

பிரதம மந்திரி கலாநிதி. மன்மோகன் சிங் பின்வருமாறு மேலும் கூறினார்:

"13ஆவது திருத்தத்தின் மீது கட்டியெழுப்பப்படும் ஒரு காத்திரபூர்வமான அதிகாரப் பரவலாக்கல் பொதி நீடித்த அரசியல் தீர்வொன்றிற்குத் தேவையான நிலைமையை உருவாக்கும். சமாதானம், நீதி மற்றும் கௌரவம் ஆகியவற்றோடு ஜனநாயகம், பன்மைத்துவம், சம வாய்ப்பு மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் ஆகியன கொண்டதொரு சூழ்நிலையில் இலங்கை மக்கள் அனைவரும் தமது வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு ஒரு காரணியாக அமையும். அனைத்துச் சமூகங்களுக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஓர் அரசியல் தீர்வை விருத்தி செய்வதற்கான தனது மன உறுதியை இலங்கையின் சனாதிபதி மீள வலியுறுத்தினார். இந் நோக்கத்திற்காக அதிகாரமளித்தல் வாயிலாக தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பலப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அரசியலமைப்பின் உரிய ஏற்பாடுகளை குறிப்பாக, தொடர்ந்து அமுல்படுத்துவதற்கான தனது திடசங்கற்பத்தை சனாதிபதி வெளியிட்டார். இச் சூழ்நிலையில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் விரிவானதொரு பேச்சுவார்த்தையை நடத்துவது தொடர்பான தனது கருத்துக்களை அவர் பகிர்ந்து கொண்டார். இந்தியப் பிரதம மந்திரி, இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்கள் மத்தியிலும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்புவதற்கான இந்தியாவின் ஆக்கபூர்வமான ஆதரவைத் தெரிவித்தார்.

இப்பற்றுறுதி பின்னர் 2011 மே மாதத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் புது டில்லிக்கு விஜயம் செய்தபோது மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது. இந்திய வெளியுறவு அமைச்சருடன் இணைந்து வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை அறிக்கை பின்வருமாறு கூறியது:

> இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் துரிதமானதும் உறுதியானதுமான முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கான தனது அரசாங்கத்தின் கடப்பாட்டை உறுதிப்படுத்தினார். 13வது திருத்தத்தின்மீது கட்டி எழுப்பப்படும் ஓர் அதிகாரப் பரவலாக்கல் பொதி அத்தகைய நல்லிணக்கத்திற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்யும்.

இக்கடப்பாடு 2012 ஜனவரியில் கொழும்பில் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தப்பட்டது. சனாதிபதி ராஜபக்'வை சந்தித்த பின்னர், வருகை தந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கௌரவ எஸ்.எம். கிருஷ்ணா அமைச்சர் ஜி.எல் பீரிசுடன் ஒரு கூட்டு பத்திரிகை மாநாட்டில் உரையாற்றும்போது கூறினார்:

> இலங்கை அரசாங்கம் காத்திரபூர்வமான அதிகாரப் பரவலாக்கத்தை எய்தும் வண்ணம் இலங்கை அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம் மற்றும் அதன்மீது மேலும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வை நோக்கி முன் நகர்வதற்கான அதன் பற்றுறுதியை எமக்குப் பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தியுள்ளது. பேச்சுவார்த்தை நடைமுறைக்கான ஒரு துரிதமானதும் ஆக்கபூர்வமானதுமான அணுகுமுறையை எதிர்பார்த்து நாம் காத்திருக்கிறோம்.

அதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்னர், 2011 நொவம்பர் மாதத்தில், சனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பின்வரும் முக்கிய பரிந்துரையை உள்ளடக்கி இருந்தது:

பிராந்தியங்களுக்கு, குறிப்பாக அடிமட்டத்தில் இயன்றவரை அதி கூடிய அதிகாரப் பரவலாக்கத்திற்காகவும் மத்தியில் அதிகாரப் பகிர்வுக்காகவும் தற்போது நிலவும் ஏற்பாட்டின் மீது மேலும் கட்டியெழுப்பி அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஒரு கருத்தொருமைப்பாட்டை விருத்தி செய்வதற்கான நல்லெண்ண முயற்சியொன்றைத் தொடங்குதல்.

அவ்வாணைக்குழு பின்வருமாறு கருத்துரைத்தது:

அதிகாரப் பரவலாக்கலானது, முக்கியமாக நாட்டு மக்கள் மத்தியில் கூடிய சுமுக நிலையையும் ஒற்றுமையையும் மேம்படுத்த வேண்டுமேயன்றி, குழப்பத்தையும் ஒற்றுமை இன்மையையும் மேம்படுத்தக் கூடாது. 'ஒரே மக்கள்' மற்றும் பொதுவான தனித்துவம் என்பதை ஊக்குவிப்பதுதான் வளம் மிக்க பன்மைத்துவத்தைப் பாதுகாத்துப் போற்றும் அதேவேளை, எந்தவொரு வடிவிலான அதிகாரப் பரவலாக்கத்தினதும் முதன்மையான நோக்கமாக அமைதல் வேண்டும்.

அனைத்துச் சமூகங்களையும் சார்ந்த மக்களுக்கு எல்லா மட்டங்களிலும் குறிப்பாக, அதிகாரப் பரவலாக்கத்தின் அனைத்துப் படிநிலைகளிலும் அதிகாரமளிக்கப்படுவதை உறுதி செய்வதே முக்கிய கவனக் குவிப்பாக அமைதல் வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் எந்தவொரு இன சமூகத்திற்கும் சிறப்புரிமை வழங்கவோ அல்லது பாதிக்கவோ கூடாதென்பதோடு, இந்த வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு இனச் சமுதாயத்தையும் சேர்ந்த மக்களுக்கும் பாரபட்சமானதாகவோ அல்லது ஒரு மக்களினால் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தென்படவோ கூடாது.

ஜனநாயக ரீதியாக மக்களுக்கு வலுவூட்டுதல் அரசியலமைப்பின் விசேட ஏற்பாடுகளிலிருந்தும் நாடு சுயமாக மேற்கொண்ட உடன்படிக்கைக் கடப்பாடுகளிலிருந்தும் எழுகின்ற தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் அடிப்படைக் கடப்பாடாக இருக்கும் மனித உரிமைகளின் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்ற விரிவான வரைச் சட்டகத்தினுள் இடம்பெற வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் விடயத்தைத் தீர்த்து வைப்பதில் இரு விடயங்கள் அரசாங்கத்தின் கவனத்தை வேண்டி நிற்கின்றன. முதலாவதாக, அடிமட்டத்தில் கூடிய மக்கள் பங்கேற்பை உறுதி செய்யுமுகமாக

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வலுவூட்டுதல். இரண்டாவதாக, மாகாண சபைகள் முறைமையின் தொழிற்பாட்டில் நிலவும் குறைபாடுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் மக்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் பொருத்தமானதொரு அதிகாரப் பரவலாக்கல் முறைமையை திட்டமிடுவதில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அது இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாதுகாக்கும் அதேவேளை, அதன் வளமான பன்மைத்துவத்தைப் போற்றிப் பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பரிசீலிக்கப்படக்கூடிய ஒரு மேலதிக பொறிமுறை மாகாணங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் இரண்டாவது சபையாகும். அத்தகையதொரு பொறிமுறை, மாகாணங்களில் உள்ள அரசியல் தலைமைத்துவம் மற்றும் மக்கள் ஏனையவற்றின் மத்தியில் ஒரு மாகாணத்திற்கு குறிப்பிட்டதொரு பொருத்தப்பாட்டினைக் கொண்ட பிரச்சினைகள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய சட்டவாக்க நடவடிக்கைகளை ஆராய்ந்து சட்டவாக்கத் தீர்மானம் மேற்கொள்ளலில் தமக்கும் ஆற்றுவதற்கு ஒரு பங்குண்டு எனும் ஒரு நம்பிக்கை உணர்வை அவர்கள் மத்தியில் உருவாகக் கூடும்.

அதன் பின்னர், இலங்கை அரசாங்கமே ஐநா மனித உரிமைகள் பேரவையில் மூன்று தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கியது: முறையே 2015 ஒக்டோபரிலும் 2017 மார்ச்சிலும் மற்றும் 2019 மார்ச்சிலும் HRC 30/1, HRC 34/1, மற்றும் HRC 40/1. பின்னர் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களினால் மீள உறுதி செய்யப்பட்ட HRC 30/1 தீர்மானம் பின்வரும் வார்த்தைகளை உள்ளடக்கி இருந்தது:

தேவையான அரசியலமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசியல் தீர்வொன்று காண்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் பற்றுறுதியை வரவேற்கின்றது நல்லிணக்கத்திற்கான ஓர் உள்ளார்ந்த அம்சமான அரசியல் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதன் மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர்களாலும் மனித உரிமைகள் முழுமையாக அனுபவிக்கப்படுதல் ஆகியவற்றின் மீதான அதன் பற்றுறுதியை நிறைவேற்றுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை ஊக்குவிக்கின்றது அத்துடன், அனைத்து மாகாண சபைகளும் இலங்கையின்

அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்திற்கமைய பயனுறுதி மிக்க வகையில் இயங்கக்கூடியதாக இருப்பதை உறுதி செய்ய அரசாங்கத்தை ஊக்குவிக்கின்றது.

2016 ஜனவரி 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய ஓர் உரையில் அப்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கையையும் சேனாநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையையும் நினைவுபடுத்தியதோடு, பின்னர் அவை மீளப் பெறப்பட்டமை குறித்து வருந்தினார். இவ்வொப்பந்தங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தால் ‘‘பிரபாகரன்’’ என்ற தன்மையிலான ஓர் ஆளுமை இந்த நாட்டில் ஒருபோதும் தோன்றியிராது என்று அவர் கூறினார்.

2019 நொவொம்பர் 29 ஆம் திகதி சனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இந்தியாவிற்கான விஜயத்தின்போது பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி பின்ருமாறு குறிப்பிட்டார்:

> இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பாகவும் நாங்கள் வெளிப்டையாகக் கருத்துக்களை பறிமாறிக்கொண்டோம். இன சுமுக நிலை தொடர்பான தனது விசேட அரசியல் கண்ணோட்டத்தைப் பற்றி சனாதிபதி ராஜபக்ச என்னிடம் கூறினார். சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றிற்கான தமிழர்களின் வேணவாக்களைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நல்லிணக்க நடைமுறையை முன்னெடுத்துச் செல்லுமென நான் நம்புகிறேன். அது 13 வது திருத்தத்தை அமுல்படுத்துவதையும் உள்ளடக்குகிறது. வடக்குக் கிழக்கு அடங்கலாக இலங்கை முழுவதும் அபிவிருத்திக்கான ஒரு நம்பகமான பங்காளராக இந்தியா மாறும்.

புதிய அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட வேண்டிய ஏதாவது ஒரு விடயமிருப்பின், அது தமிழ் தேசிய பிரச்சினையின் தீர்வுதான் என்பது மேலே குறிப்பிடப்பட்ட அனைத்திலுமிருந்து தெளிவாகிறது. நாடு மூன்று தசாப்த காலமாக ஒரு சிவில் யுத்தத்தை அனுபவித்தது இந்த விடயத்திற்காகவன்றி, வேறெந்த பிரச்சினைக்காகவும் அல்ல. வேறெந்தப் பிரச்சினையும் இந்தியாவிற்கும் ஐநா உள்ளிட்ட ஏனைய சர்வதேச சமூகத்திற்கும் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கு இந்நாட்டைத் தேவைப்படுத்தவில்லை -

அக்கடப்பாடுகள் அனைத்தும் இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு காத்திரபூர்வமான அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை வழங்குவதற்கான தெளிவானதொரு வாக்குறுதியை உள்ளடக்குகின்றன - மீண்டும் மீண்டும் வழங்கப்பட்ட இவ்வாக்குறுதிகள் வெவ்வேறு சனாதிபதிகள் மற்றும் அரசாங்கங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகளை ஒத்துள்ளன. அவை அனைத்தும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை நோக்கியதாகவே அமைந்திருந்தன. தமிழ் மக்களின் பிரதான பிரதிநிதிகளான நாங்கள் 1956 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு தேர்தலிலும் அப்போதிருந்த அரசியலமைப்பை நிராகரித்துள்ளதோடு, சகல மக்களுக்கும் கௌரவம், சமத்துவம் மற்றும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் தமது இறையாண்மையைப் பிரயோகிப்பதற்கான காத்திரபூர்வமான வாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் ஒரு புதிய அரசியலமைப்பு இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளோம் என்பது கவனிக்கத் தக்கதாகும். அத்தகைய ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் எமது நிலைப்பாட்டிற்கான உறுதியானதொரு அங்கீகாரத்தை திரும்பத் திரும்ப வழங்கியுள்ளனர்.

கௌரவத்திற்கும் தன்னாதிக்கத்திற்குமான தமிழ் மக்களின் கோரிக்கைகள் எப்போதும் அத்தகைய கோரிக்கைகள் விடுக்கப்பட்ட காலத்தில் நிலவிய ஆட்சிக் கட்டமைப்பின் பின்னணியிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதெல்லாம் - எடுத்துக் காட்டாக, பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை போன்ற ஆரம்ப கால முயற்சிகள் மூலமாக - தமிழ் மக்களின் கோரிக்கைகள் ஓர் ஐக்கிய இலங்கைக்குள் ஆழமாக வேரூன்றிக் காணப்பட்டது. 1970 களில் நிலவிய பெரும்பான்மைவாத மற்றும் பேரினவாத அரசியலமைப்புக் கட்டமைப்புகளின் காரணமாக அத்தகைய ஏற்பாடொன்று சாத்தியமற்றதாக்கப்பட்டபோதுதான் இக்கோரிக்கைகள் பிரிவினைவாதத்தை நோக்கி மாறிச் சென்றன. பதின்மூன்றாவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அர்த்தபூர்மான ஆட்சி அதிகாரப் பகிர்வு மீண்டும் ஒரு முறை அடையப் பெறுவதாக ஆகியதனால் காலப்போக்கில் தனி அரசு ஒன்றிற்கான கோரிக்கை பின்பற்றப்படவில்லை என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம். ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது இலங்கையின் தற்போதைய சமூக ஒப்பந்தத்தின் வேறு பிரிக்க முடியாததொரு

அங்கமாகியுள்ளது என்பதோடு, அது இந் நாட்டின் தமிழ் மக்களது கௌரவத்தோடு மிக ஆழமாகப் பிணைந்துள்ளது என்று நாம் கருதுகின்றோம். எனவே, அர்த்தபூர்வமான ஆட்சி அதிகாரப் பகிர்வை உறுதி செய்வதற்கான கடந்த கால கடப்பாடுகளைத் தட்டிக்கழிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் தமிழ் மக்களின் கௌரவத்திற்கு இழைக்கப்படும் இழுக்காகவும் இந்த நாட்டின் வெவ்வேறுபட்ட மக்களுக்கிடையிலான தற்போதைய சமூக ஒப்பந்தத்தை மீறுவதாகவுமே அமையும்.

இலங்கை மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அது அதன் உறுப்புரை 21(3) இல் பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது: ‘‘மக்களின் விருப்பமே அரச அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும் இவ் விருப்பமானது சர்வசன மற்றும் சமமான வாக்குரிமை மூலமானதும் காலாகாலத்தில் நடத்தப்படுவதும் உண்மையானதும் அத்துடன் இரகசிய வாக்களிப்பின் மூலம் அல்லது அதற்கு இணையான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறையின் மூலம் நடத்தப்பட வேண்டியதுமான தேர்தல்களில் வெளிப்படுத்தப்படும்.’’

மேலும், குடியியல் மற்றும் அரசியல் அதிகாரங்கள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இவ் உடன்படிக்கைகள் ஒவ்வொன்றினதும் உறுப்புரை 1 பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது: ‘‘சகல மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. அவ் உரிமையினால் அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதோடு, தமது பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை சுதந்திரமாக முன்னெடுப்பர்.’’ அதற்கமைய, தமிழ் மக்களின் உள்ளக சுய நிர்ணயத்திற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான சர்வதேச சட்டபூர்வ கடப்பாடு இலங்கைக்கு உண்டு. எனவே, தற்போதைய அரசியலமைப்பு வகுத்தல் முயற்சி அர்த்தபூர்வமான ஆட்சி அதிகாரப் பகிர்வினை புதிய அரசியலமைப்பின் மையப் பொருளாக அங்கீகரித்தல் வேண்டும் என்பது வெளிப்படையான உண்மையாகும். உள்ளக சுய நிர்ணயத்திற்கான உரிமையை ஒரு மக்கள் குழுவிற்கு தொடர்ச்சியாக மறுப்பது சர்வதேச சட்டத்தின் கீழ் வெளியக சுய நிர்ணயத்திற்கு அவர்களை உரித்துடையவராக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இந்தப் பின்னணியில் தான் இலங்கையின் ஒரு புதிய அரசியலமைப்பில் பின்வரும் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும், பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்:

**1. அரசின் தன்மை:**

(1) இலங்கை (சிலோன்) அரசியலமைப்பில் விதித்துரைக்கப்பட்ட ஆட்சி அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டிய மத்திய மற்றும் பிராந்திய நிறுவனங்களைக் கொண்ட ஒரு சுதந்திரமான, இறையாண்மைமிக்க, சுயாதீனமான மற்றும் ஐக்கிய குடியரசாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(2) பிராந்தியங்களுள் ஒன்று வடக்குக் கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் ஆள் புலத்திற்கானதாதல் வேண்டும்.

**2. அடிப்படை உரிமைகள்:**

அரசியலமைப்பு மனித கௌரவம் மற்றும் தனிப்பட்ட தன்னாதிக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தனவும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாட்டின் முழுப் பரிமாணத்தையும் பிரதிபலிப்பனவுமான மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் விரிவானதொரு நிரலை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

**3. மொழி**

(1) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை இலங்கை முழுவதும் அரச கரும மொழிகளாகவும் இத் தீவு முழுவதும் நிருவாக மொழிகளாகவும் அரசியலமைப்பு அங்கீகரிக்கவேண்டும்.
(2) பிரசைகளுக்கு தாம் தெரிவு செய்யும் மொழியில் அரசுடன் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ தொடர்பாடல் கொள்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும்.
(3) ஒரு தண்டத்தை அல்லது அபராதத்தை அல்லது தண்டணையை தெரிவிக்கும், குறிப்பிடும் அல்லது விதிக்கும் உத்தியோகபூர்வ

ஆவணங்கள், அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகள் மொழி உரிமையை மீறி விடுக்கப்படுமாயின், அவற்றிற்கு சட்டத்தில் எவ்வித வலுவும் அல்லது தாக்கமும் இருக்காது என்று அரசியலமைப்பு குறித்துரைக்க வேண்டும்.

**4. நிறைவேற்றுத் துறை:**

(1) பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டியவரும் பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் செயல்படுபவருமான சம்பிரதாயபூர்மான ஒரு சனாதிபதிக்கு அரசியலமைப்பு ஏற்பாடு செய்யவேண்டும். பிரதம மந்திரியே அமைச்சரவையின் தலைவராக இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலிருந்து பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். விடயங்களையும் பணிகளையும் ஒப்படைத்தல் பிரதம மந்திரியின் அதிகாரத்தினுள் இருத்தல் வேண்டும் என்பதோடு, இவ்வதிகாரங்கள் பிரதம மந்திரியினால் எவ்வேளையிலும் பிரயோகிக்கப்படலாம்.'

**5. சட்டவாக்கத் துறை:**

(1) மக்களினால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு சபையையும் பிராந்தியங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் இரண்டாவது சபையையும் கொண்ட ஓர் இரு சபை சட்டவாக்கத் துறைக்கு அரசியலமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(2) இரு சபைகளிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டிய அரசியலமைப்பிற்கான ஒரு திருத்தம் தொடர்பான சட்டமூலத்தைத் தவிர்ந்த ஏனைய சட்டங்கள் ஒரு சட்டமூலம் இரு சபைகளிலும் சாதாரண பெரும்பான்மையுடன்

நிறைவேற்றப்பட்டதன் பேரில் நிறைவேற்றப்பட வேண்டும். பிராந்தியங்களுக்கான அதிகாரங்களைப் பாதிக்கும் திருத்தங்கள் விடயத்தில், இரண்டாவது சபைக்கு பிராந்தியங்களிலிருந்து தெரிவாகும் தூதுக்குழுவினருள் ஒவ்வொருவரது சம்மதமும் வேண்டும் என்ற மேலதிக நிபந்தனை ஒன்று இருக்கவேண்டும்.

## 6. ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளல்:

(1) அரசியலமைப்பிற்கான ஒரு பின்னிணைப்பில் விபரிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒரு பிராந்திய சபை இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஓர் ஆளுநர் இருக்க வேண்டும். அவர், உரிய பிராந்திய சபையின் முதலமைச்சரது ஆலோசனையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, அத்தகைய ஆலோசனை பிராந்திய சபையின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும்.

(3) ஆளுநர், அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு செயற்படுவதைத் தவிர, மற்றபடி முதலமைச்சர் மற்றும் பிராந்திய சபையின் அமைச்சரவை ஆகியவற்றின் ஆலோசனையின் பேரிலேயே செயற்பட வேண்டும்.

(4) அரசியலமைப்பிற்கான ஒரு பின்னிணைப்பில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் மீது பிராந்திய சபைகளுக்கு சட்டவாக்க அதிகாரம் இருத்தல் வேண்டும். ஒரு பிராந்திய சபையினால் முறையாக நிறைவேற்றப்படும் நியதிச் சட்டங்கள் உரிய பிராந்தியம் தொடர்பாக அதே விடயத்தின் மீது இயற்றப்பட்ட முன்னைய சட்டங்களை விட மேலோங்கி நிற்க வேண்டும்.

(5) தாமதத்தைத் தவிர்க்கும் முகமாக, நியதிச் சட்டங்களுக்கான ஆளுநரின் ஒப்புதல் தொடர்பாக பொருத்தமான கால வரையறை கொண்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(6) ஒரு பகிரப்பட்ட விடயம் தொடர்பான தேசியக் கொள்கை அதிகாரப் பரவலாக்கத்தின் குறிக்கோளை மழுங்கடிக்கிறது. எனவே, அனைத்து பிராந்தியங்களோடும் கலந்துரையாடப்பட்டு, அனைத்துப்

பிராந்தியங்களும் இணங்குகின்றவிடத்து, பிராந்தியங்கள் எந்த வரைச்சட்டக சட்டங்களினுள் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயம் தொடர்பாக முழுமையாக சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகிக்க முடியுமோ அந்த வரைச்சட்டக சட்டகத்திற்கு மட்டும் தேசியக் கொள்கை மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(7) சொல்லப்பட்ட சட்டமூலத்தை அங்கீகரிப்பதற்கு அனைத்து பிராந்திய சபைகளும் வாக்களிக்குமாயின், பிராந்திய சபைகளுக்குப் பகிரப்பட்ட விடயங்கள் தொடர்பாக மத்திய சட்டவாக்கத் துறை சட்டங்களை இயற்றலாம். ஒரு பிராந்திய சபை அவ்வாறு அங்கீகரிக்காதவிடத்து, அச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், சொல்லப்பட்ட பிராந்தியத்தினுள் அதற்கு வலு அல்லது தாக்கம் இருத்தலாகாது.

(8) பகிரப்பட்ட அதிகாரங்கள், சம்பந்தப்பட்ட பிராந்தியத்தின் சம்மதமின்றி மேவிச்செல்லப்பட அல்லது திரும்பிப் பெறப்பட முடியாது. அதிகாரப் பரவலாக்கத்தைப் பாதிக்கும் அரசியலமைப்புத் திருத்தங்கள் விடயத்தில், இரு சபைகளிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக பிராந்தியங்களின் ஒவ்வொரு பிராந்திய தூதுக்குழுவினதும் அனுமதியைக் கொண்டிருக்க வேண்டும்.

(9) விடயங்களையும் பணிகளையும் ஒப்படைப்பது இயன்றவரை அதி கூடிய அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும். தேசியப் பாதுகாப்பு, ஆயுதப் படை, வெளிவிவகாரம் மற்றும் தேசிய பொருளாதார விவகாரம் முதலிய மத்திய அரசாங்கத்திடம் அவசியமாக இருக்க வேண்டிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் அனைத்தும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(10) பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் மற்றும் பணிகளுள் பின்வருவன அடங்கும் (எனினும், அவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டிராது):

அ. காணி

ஆ. சட்டமும் ஒழுங்கும்

இ. மூன்றாம் நிலைக் கல்வி உள்ளிட்ட கல்வி

ஈ. சுகாதாரம்

உ. வீடமைப்பு மற்றும் நிர்மாணம்

ஊ. விவசாயம் மற்றும் கமநலச் சேவைகள்

எ. நீர்ப்பாசனம்

ஏ. கடற்றொழில்

ஐ. விலங்கு வேளாண்மை மற்றும் கால்நடை அபிவிருத்தி

ஒ. மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு

ஓ. உள்ளூராட்சி

ஔ.பிராந்திய அரசாங்க சேவை

க. பிராந்திய பொலிஸ் சேவை்

கா. சமய மற்றும் கலாசார விவகாரங்கள்

கி. ஏனைய அனைத்து சமூகப் பொருளாதார மற்றும் கலாசார விடயங்கள்

கீ. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு வங்கிகள்

கு. கைத்தொழில்கள் மற்றும்

கூ. வரி, மத்திய மானியங்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு கடன்கள் மற்றும் மானியங்கள், மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு.

(11) பிரதான செயலாளர் மற்றும், பிராந்திய அமைச்சுகளுக்கான ஏனைய செயலாளர்கள் ஆகியோரைத் தவிர்ந்த, பிராந்திய அரசாங்கச் சேவை மற்றும் பிராந்திய பொலிஸ் சேவைக்கான அனைத்து நியமனங்களும் உரிய பிராந்தியத்தின் முதலமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட பிராந்தியத்தின் அமைச்சரவைக்கும் பொறுப்புக் கூறவேண்டிய பிராந்திய அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் பிராந்திய பொலிஸ்சேவை ஆணைக்குழுவினாலும் விடயத்திற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(12) பிரதான செயலாளர், பிராந்தியத்தின் முதலமைச்சருடைய ஒருப்பாட்டுடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் சனாதிபதியினால் நீக்கபடக்கூடியவராக இருத்தலும் வேண்டும். பிராந்திய அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் முதலமைச்சரினதும் உரிய பிராந்தியத்தின் அமைச்சரவையினதும் பரிந்துரையின் பேரில்

ஆளுநரினால் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, அவர்களின் ஆலோசனையின் பேரில் நீக்கக்கூடியவராக இருத்தலும் வேண்டும்.

(13) ஒவ்வொரு பிராந்தியத்திலும் சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பிற்குப் போதுமான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 7. நீதித் துறை:

(1) மத்திய சட்டவாக்கத் துறையினால் இயற்றப்படும் சட்டங்களினதும் பிராந்திய சபைகளினால் இயற்றப்படும் நியதிச் சட்டங்களினதும் அரசியலமைப்புக்கு முரணாகாத தன்மை பற்றி விசாரித்து தீர்மானிப்பதற்காக அரசியலமைப்பு பேரவையினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு அரசியலமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். அது சட்ட நடவடிக்கைகளின்போது எழுவதாயினும் அல்லது சட்ட நடவடிக்கைகளை தாக்கல் செய்வதன் மூலம் எழுவதாயினும், அத்தகைய அதிகாரம், அத்தகைய சட்டம் அல்லது நியதிச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்னர் அல்லது இயற்றப்பட்ட பின்னர் பிரயோகிக்கப்படலாம்.

(2) அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பான விடயங்கள் தொடர்பாக, அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தீர்மானம் இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

(3) அடிப்படை உரிமைகள் பற்றிய மனுக்கள் தொடர்பான நியாயாதிக்கம் மாகாண உயர் நீதி மன்றங்களினால் பிரயோகிக்கப்பட வேண்டும்.

## 8. பொதுமக்கள் பாதுகாப்பு:

(1) அவசரகால நிலைப் பிரகடணம் பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் அல்லது பிராந்தியத்தின் முதலமைச்சரின் ஒருப்பாட்டோடு பிராந்தியத்தின் ஆளுநரின் ஆலோசனையின்பேரில் சனாதிபதியினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசியலமைப்பு ஏற்பாடு செய்யவேண்டும். அத்தகையதோர்

அவசரகால நிலையானது, பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் (இயற்கை அனர்த்தங்கள் மற்றும் தொற்று நோய் பரவல் ஆகியவற்றின் விளைவாக பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் அடங்கலாக) அல்லது நாட்டில் அல்லது பிராந்தியத்தில் சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பராமரிப்பு ஆகியவற்றிற்கு தெளிவானதும் உடனடியானதுமான ஓர் ஆபத்து நிலவுகிறது என்று அஞ்சுவதற்கான நியாயமான காரணங்கள் நிலவுகின்றபோது மாத்திரமே பிரகடனப்படுத்தப்பட வேண்டும். ஓர் அவசர கால நிலை அத்தகைய தெளிவானதும் உடனடியானதுமான ஆபத்து நிலவுகின்ற ஆள்புலங்கள் தொடர்பாக மாத்திரமே பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

(2) அவசர கால நிலைப் பிரகடனம் அத்தகைய அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்படும் அடிப்படையைக் குறிப்பிட வேண்டுமென்பதோடு, காலத்தால் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) அவசர கால நிலைப் பிரகடனமானது, விடயத்திற்குப் பொருத்தமானவாறு, பாராளுமன்றத்தின் அங்கீகரத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட வேண்டும் என்பதோடு, அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் நீதித்துறை மீளாய்விற்கு உட்படுதலும் வேண்டும். அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாதவிடத்து அல்லது அரசியலமைப்பு நீதிமன்றம் அவ்வாறு தீர்ப்புக் கூறுமிடத்து, அத்தகைய அவசர கால நிலை ரத்துச் செய்யப்பட வேண்டும்.

## 9. காணி:

(1) காணி ஒரு பகிரப்பட்ட விடயமாதல் வேண்டும். மத்திய நிரலில் உள்ள ஒரு விடயத்திற்காக மத்திய அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படும் அனைத்து அரச காணிகளும் தொடர்ந்தும் மத்திய அரசினால் பயன்படுத்தப்பட வேண்டும். அரச காணிகளில் பிரசைகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனைய அனைத்து அரச காணிகளும் சம்பந்தப்பட்ட பிராந்தியங்கள் வசம் இருக்க வேண்டும் என்பதோடு, காணிமீது

அதற்கு பகிரப்பட்ட அதிகாரங்களுக்கமைய, பிராந்தியத்தினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

(2) அரச காணிகளைப் பராதீனப்படுத்தல் பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை மற்றும் சேனாநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) காணிகளைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் கோரிப்பெறும் அதிகாரம் பிராந்தியங்களுக்கு இருக்கவேண்டும்.

**10. பொலிஸ்:**

(1) சட்டம் மற்றும் ஒழுங்கு ஒரு பகிரப்பட்ட விடயமாதல் வேண்டும்.

(2) ஒரு தேசிய பொலிஸ் படையும் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் பொலிஸ் படைகளும் இருக்க வேண்டும்.

(3) தேசிய பொலிஸ் படையினால் கையாளப்படுவதற்கென ஒதுக்கப்படும் குற்றங்கள் அரசியலமைப்பிற்கான ஓர் அட்டவணையில் நிரல் படுத்தப்பட வேண்டும். ஏனைய அனைத்துக் குற்றங்களும் பிராந்திய பொலிசின் அதிகார வரம்பினுள் இருத்தல் வேண்டும்.

(4) பிராந்திய பொலிசின் தலைவர், பிராந்தியத்தின் முதலமைச்சரது ஆலோசனையின் பேரில் ஆளுநரினால் நியமிக்கப்பட வேண்டிய பிராந்திய பொலிஸ் ஆணையாளராக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பிராந்திய சபையின் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் ஆளுநரினால் நியமிக்கப்படும் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழு ஒன்று இருக்க வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆளணியினரின் நியமனம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் இருக்க வேண்டும். பிராந்திய பொலிஸ் ஆணையாளர், சட்டம் ஒழுங்கு என்ற விடயம் வழங்கப்பட்டுள்ள பிராந்திய அமைச்சருக்கு வகை கூறுபவராகவும் பொறுப்புக் கூறுபவராகவும் இருக்க வேண்டும்.

ஒப்பம் ஆர். சம்பந்தன், பா.உ
தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும்
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர்

ஒப்பம்: மாவை. எஸ். சேனாதிராஜா
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் இணைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஒப்பம்: செல்வம் அடைக்கலநாதன், பா.உ
தலைவர். தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் இணைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஒப்பம்: டீ. சித்தார்த்தன், பா.உ
தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் மற்றும் இணைத் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு